அலகு

# 8

## நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

மாணவர் பெயர் வகுப்பு

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

*வடிவமைத்தவர்:* ***கி.அரிராமர்*** *M.COM.,B.ED.,M.PHIL.,முதுகலைப்பட்டதாரி வணிகவியல் ஆசிரியர்,*

*அரசு மேல்நிலைப்பள்ளி,பிள்ளையார்நத்தம், CELL NO-9787428727*

சரியான விடையைத் தேர்வு செய்யவும்:

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல?

(அ) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.

(ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.

(இ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.

(ஈ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள், பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.

2. இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய ________ தகவல்களை வழங்குகிறது.

(அ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
(இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான (ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

3. நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?

(அ) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு (ஆ) பொது அளவு அறிக்கை
(இ) ஒப்பீட்டு அறிக்கை (ஈ) போக்கு ஆய்வு

4. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது

(அ) பணம்சாரா தகவல்கள் (ஆ) கடந்தகால தகவல்கள்

(இ) குறுகிய கால தகவல்கள் (ஈ) நீண்டகால தகவல்கள்

LIVEWORKSHEETS

5. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?

(அ) போக்குப் பகுப்பாய்வு (ஆ) பொது அளவு அறிக்கை
(இ) ஒப்பீட்டு அறிக்கை (ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்

6. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது

(அ) நடப்புப் பொறுப்புகள் (ஆ) நடைமுறை முதல்
(இ) நிலைச் சொத்துகள் (ஈ) நீண்டகாலச் சொத்துகள்

7. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?

(அ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.

(ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல.

(இ) நிதி நிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.

(ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.

8. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹ 1,25,000 லிருந்து ₹ 1,50,000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?

(அ) + 20 % (ஆ) + 120 % (இ) – 120 % (ஈ) – 20 %

9. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?

(அ) 175 (ஆ) 125 (இ) 25 (ஈ) 100

10. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹ 80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹ 88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?

(அ) 10 % (ஆ) 110 % (இ) 90 % (ஈ) 11%

LIVEWORKSHEETS